# ஆத்மஜோதி



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"இறந்திடு மகன்வளர்ந் தேய்தப் பாடலோன்
றறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்"



ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.

| சோதி 6 | ஜய௵ ஆடிமீ 1-ந் திகதி | சுடர் 9 |
|---|---|---|

## பொருளடக்கம்.

| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சுந்தரர் வணக்கம் | 225 |
| 2 | கடையேன் வேறு எதை நினைப்பேன் | 226 |
| 3 | அடியார்.........பெரியார் | 227 |
| 4 | அன்றும், இன்றும், இனிமேலும் | 231 |
| 5 | சுந்தரர் தேவாரம் | 232 |
| 6 | மகத்தான மரபு | 233 |
| 7 | ஸ்ரீகேதார்-பத்திரியாத்திரை | 234 |
| 8 | சொப்பனத்திலாகிலும் | 237 |
| 9 | பரவையார் | 238 |
| 10 | சமயம் | 241 |
| 11 | அன்னை...... ஸ்ரீ சிவானந்தர் | 242 |
| 12 | கண்ணனின் உபதேசங்கள் | 244 |
| 13 | சௌரமதம் | 246 |
| 14 | உருவவழிபாடு | 219 |
| 15 | தேவிவணக்கம் | 251 |
| 16 | செய்தித்திரட்டு | 252 |

## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75 வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு
பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]

ஓம்



# சுந்தரர் வணக்கம்.

நேசநிறைந்த வுள்ளத்தால் நீலநிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை யெல்லாவுயிருந் தொழவெடுத்துத்
தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.
—சேக்கிழார்.

வான்காண விந்திரனு மாலயனு மாதவருந்
தான்காண விறையருளாற் றனித்தவள யானையின்மேற்
கோன்காண வெழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே.

தேன்படிக்கு மமுதாமுன் திருப்பாட்டைத் தினந்தோறு
நான்படிக்கும் போதென்னை நானறியே னுவொன்றே
வூன்படிக்கு முளம்படிக்கு முயிர்படிக்கு முயிர்க்குயிருந்
தான்படிக்கு மனுபவங்காண் டனிக்கருணைப் பெருந்தகையே

இன்பாட்டுந் தொழிற்பொதுவி லியற்றுகின்ற வெம்பெருமா
னுன்பாட்டுக் குவப்புறல்போ லூர்ப்பாட்டுக் குவந்திலரென்
றென்பாட்டுக் கிசைப்பினுமென் னிடும்பாட்டுக் கரணமெலா
மன்பாட்டுக் கிசைவதுகா ணருட்பாட்டுப் பெருந்தகையே
—வள்ளலார்

# கடையேன் வேறு எதை நினைப்பேன்.

கற்பகத்தினைக் கனகமால் வரையைக்
காமகோபனைக் கண்ணுதலானைச்
சொற்பதப்பொருள் இருள் அறுத்தருளுந்
தூயசோதியை வெண்ணெய்நல்லூரில்
அற்புதப்பழ ஆவணங்காட்டி
அடியனாவென்னை ஆளதுகொண்ட
நற்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந் தென்நினைக்கேனே.

—சுந்தரமூர்த்தி.

**பொழிப்புரை:-**

(அடியார் வேண்டுவதைத் தருதலிற்) கற்பகமானவனும், பெரிய பொன்மலையாகிய மேருவைப்போன்ற பொன் மேனியுடையவனும் தன்னை எதிர்த்த காமனைக்கோபித்து எரித்தவனும். நெற்றிக்கண்ணையுடையவனும் வேதமந்திரங்களின் உட்பொருளாகி (அஞ்ஞான) இருளை நீக்கி அளித்தருளத்தக்க பரிசுத்தமான சோதி வடிவானவனும், திருவெண்ணை நல்லூரில் (அன்று) அதிசயமான பழைய (அடிமை) ஓலையைக் காட்டி (தன்னைமறந்திருந்த) என்னை (தனக்கு) அடியவனாக ஆட்கொண்ட உயர்ந்த பதமானவனும் திருநள்ளாற்றில் எழுந்தருளியவனும், (அன்பர்க்கு) அமிர்தமாயிருப்பவனும் ஆகிய பெருமானை நாய்போற் கடைப்பட்ட நான் மறந்து (வேறு) எதை நினைப்பேன்? (ஒன்றையும் நினையேன் என்றவாறு).

**விளக்கவுரை:-**

இப்பாட்டில் சுவாமிகள் தம்மை இறைவன் அருளால் ஆண்ட வரலாற்று முறையை அழகாகக் கூறுகிறார். தாம் பொன்னும் போகமும் வேண்டியபோது அவற்றைக் கொடுத்ததைக் குறித்து 'கற்பகம்' என்றார்; பின்னர் பொன்மயமாயும் இன்பமயமாயும் உள்ள திருவடியில் ஈடுபடுத்தியதைக் குறித்து 'கனகமால்வரை' என்றார்; அதன்மேல் அத்திருவடியின் நினைவுக்கு இடையூறான காம நினைவை அகற்றியமையின் 'காமகோபனைக் கண்ணுதலானை' என்றார்; மறைத்தமணி இருளைப்போக்கி உண்மையை அறிவித்தலின் 'இருள் அறுத்து அருளுந் தூய சோதியை' என்றார்; அனைத்திற்கும் அடியார்கத் தம்பால் பேரன்புவைத்து தடுத்தாட்கொண்டதை' அற்புத...... நற்பதத்தை என்றார்; தமக்குப் பிறவிநோய் ஒழிந்ததைக் குறிக்க இறுதியாக 'அமுதே' என்றழைத்தார்.



# அடியார் பெருமைபாட அவதரித்த பெரியார்.

[ஆசிரியர்]

இல்லறத்தாரை நோக்கி அறன் வலியுறுத்தல் சொல்லு முன்னரே, துறவறத்தாரைப்பற்றிப் பேசுமிடத்தில், நீத்தார் பெருமை விளக்கிய வள்ளுவர் பெருந்தகை 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று மிகவும் சுருக்கமாகக் கூறிவிட்டார். குறள் மூன்றும் அதிகாரத்தில் 'பெருமை' என்னும் பதத்தை மூன்று முறை அடுத்தடுத்துப் பாவித்த பின்னரே 'பெரியர்' என்ற பதத்தை அவர் எடுத்தாண்டுள்ள அருமை உற்றுநோக்குக!

ஆனால், இன்றைய தமிழ் மக்களிடையே ஓர் விசித்திரமான புது இலக்கணம் உருவெடுத்து வருகின்றது. அதின்படி, செய்யக் கூடாதசெயலைச் செய்பவர், செய்யத்தூண்டுபவர் பெரியார்; சொல்லத்தகாததைச் சொல்பவர். வரையவேண்டாததை வரைபவர் அறிஞர்; பிறரைத் தூற்றுந் தொழிலையே ஒரு கலையாக மாற்றிப் போற்றுபவர், பண்டிதர்; எப்பவோஇருந்துஇப்போது ஒருகுற்றத்தையோ குறையையோ இருப்பதாகக் கற்பனைசெய்து, அதற்குக் கண்டனம் விடுப்பதில் தமது வாணாளை வீணாக்குபவர் வித்துவான்; இவை போன்ற விளக்கங்களை பலரின் வாழ்க்கையில் நாம் இன்று பிரத்தியட்சமாய்க் காண்கின்றோம். அவர்களுட் சிலர் பெரியார், அறிஞர் பண்டிதர், முதலாய பட்டங்களைத் தாமே தமக்குச் சூட்டிக்கொண்டு, அவற்றை விளம்பரம் பண்ண குலாமிகளையுஞ் சேர்த்துக்கொள்கின்றனர். அவர்கள் போக்கைப் பார்த்தால், நாளடைவில் 'அடியார்' என்ற பதவியிலும் கைவைப்பார்களோவென்று அஞ்சவேண்டியுள்ளது.

இவ்வித புல்லறிவு, "வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை உடையம்யாம் என்னும் செருக்கு" மேற்கூறியவாறு பல விபரீதங்களை ஒருகாலத்தில் உண்டாக்குமெனக் கருதிப் போலும் ஒளவைப்பிராட்டியார் மிகப்பெரியது எது? என்ற ஆராய்ச்சியில் இறங்கிய போது, "இந்தப் புவனத்தில்பூமிதான் பெரிது; பூமியைப்

பார்க்கிலும் பெரிது 'கடவுள்; கடவுளோ தொண்டர்களின் உள்ளத்தில் ஒடுங்கியிருப்பவர்: ஆகையால், தொண்டர்களின் பெருமைதான் இந்த உலகில் மிகமிகப் பெரிது" என்று சட்ட திட்டமாய்ச் சந்தேகத்திற்கு இடம் வைக்காது கூறிவிட்டார். திருமூலர் கருத்தும் இதுவேயாம். "அடியார் அரனடி யானந்தங் கண்டோர்" என்கிறார் அவர்.

*அடியார் அடியார் அடியார்க் கடிமைக்*
*கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்*
*அடியார் அருளால் அவனடி கூட*
*அடியா னிவனென் றடிமை கொண்டானே.*

என்னும் திருமந்திரமே சுந்தரமூர்த்தி நாயனார் உள்ளத்தில், தாம் பிறவியெடுத்தது "மாதவஞ் செய்த தென்திசை வாழ்ந்திட, தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர" என்னும் இருபெருஞ் செயல்கள் நிகழ்தற்பொருட்டு என்னும் உண்மையை உதிக்கச் செய்திருக்கலாம் எனக் கூறுதல் மிகையாகாது.

நாயனார்க்குப் பெற்றோர் வைத்தபெயர் நம்பியாரூரர். தடுத்தாட்கொண்டபோது இறைவனால் அவருக்கு அளிக்கப்பட்டது 'வன்றொண்டன்' என்னும் நாமம். 'தம்பிரான் தோழர்' என்ற பெயர் தியாகராசப் பெருமான் சந்நிதியில் அடியார்களால் சூட்டப்பட்டது. 'சுந்தரர்' என்பதுதான் அவரின் மிகப் பழைய திருநாமம். கயிலையில் ஒருநாள் சிவபெருமான் தமது திருவுருவைக் கண்ணாடியில் பார்த்து அதில் தோன்றிய உருவத்தை வா என்று அழைக்க, அதுவே சுந்தரராகவந்ததென்பது பூர்வவரலாறு. பின்னாளில் அந்த உண்மை பேரூர்ப் புராணத்தில் வரும் கீழ்க்கண்ட பாட்டால் நமக்கு நினைவூட்டப்பட்டுள்ளது:—

*கயிலை நாயகன் காமரு தன்னுருப்*
*பயிலும் ஆடியிற் பார்த்தங் கழைத்தலும்*
*வெயில் செய்வெங்கதிர் கோடிவிராய் எனச்*
*செயிரிலாத மெய்த் தேசொடும் தோன்றினார்.*

சுந்தரர் கயிலைக்குத் திரும்பும்போது உபமன்னிய முனிவரும் ஏனையோரும் அதிசயத்தோடு கண்டகாட்சியை விபரிக்கும் இடத்தில்



'அங்க ணேரொளி யாயிர ஞாயிறு, பொங்குபேரொளி" என்று சேக்கிழார் கூறியிருப்பதையும் கண்டுகொள்க. சுந்தரருக்கு 'ஆலால' என்னும் அடைமொழி வந்தது, தேவரும் அசுரரும் சேர்ந்து அமிர்தங்கடைந்த சந்தர்ப்பத்திலாகும். அப்போது வெளிவந்த நஞ்சைக் கண்டு திருமால் முதலாய தேவர்கள் அஞ்சி ஓடிவிட்டதைத் தன் கையில் ஏந்திச்சென்று கொடுத்தகாரணம்பற்றி ஆலாலசுந்தரரானார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் அளப்பரும் பெருமைக்கு, தெய்வ அருள் நூலாகவும் தனிப்பெருங் காப்பியமாகவும் விளங்கும் பெரிய புராணத்திற்கு அவர் தன்னிகரில்லாத் தலைவனாக மிளருங் காட்சியொன்றே போதிய சான்றாகும். அவரின் வாழ்க்கையாலும் வாக்காலும் நாம் அறியக் கிடக்கும் உண்மைகளுள் முக்கியமானவை இரண்டு.

ஒன்று, பழந்தமிழ் மக்களிடையே பிறப்பால் மரபு வேற்றுமை அல்லது உயர்வு தாழ்வு பாராட்டும் வழக்கம் ஒருக்காலும் இருந்ததேயில்லை யென்பதாம். ஆதிசைவ மறையவரான சுந்தரரே உருத்திரகணிகையர் குலத்துதித்த பரவையாரையும், வேளாளர் மரபில் தோன்றிய சங்கிலியாரையும் மணந்து சிற்றின்பத்தைப் பேரின்பமாக அநுபவிக்கும் இல்வாழ்வு நடாத்தியுள்ளார். அவரது திருத்தொண்டத்தொகையில் போற்றப்பட்ட அடியார்களுள், மறையோர்களும் மன்னர்களும் மாத்திரமன்றி, வணிகர், வெள்ளாளர், வாணியர், குயவர், சாலியர், வண்ணார், மறவர், பாணர், பரதவர், சான்றார், நீசர் ஆனவர்களும், இன்ன மரபினரென்றே அறியமுடியாத பதின்மூவருங் சேர்க்கப்பட்டுள்ளார்கள், அவர்களுட்பலர் தமிழர், சிலர் மலையாளத்தவர், வேறுசிலர் தெலுங்குநாட்டையும் பிறநாடுகளையும் சேர்ந்தவர்கள்.

மற்றைய உண்மை, அந்த அடியார் திருக்கூட்டத்தில் சுந்தரர் காலத்தவர் மாத்திரம் அல்லாமல், அவருக்கு முற்காலத்தவரும் எதிர்காலத்துவருவோரும் சேர்க்கப்பட்டிருப்பதாகும். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் இந்தியாவிலும் ஈழத்திலும் தோன்றிய மகான்கள் சகலரும் அத்திருக் கூட்டத்தினரேயாம். இந்த அருங்கருத்தை வைத்தே சுந்தரர் "அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்று பாடினார். இதனை விளக்க விரும்பிய சேக்கிழார் பெருமான் "மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்

டுக்கப்பால், முதல்வனுர் அடிச்சார்ந்த முறைமையோடும்" என இடத்தால் அப்பாலாந் தன்மையையும், "நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும், நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்" எனக் காலத்தால் அப்பாலாம் இப்பாலாந் தன்மையையும் அருமையாகக் காட்டியுள்ளார், மேலும் சேக்கிழார் புராணம்பாடிய கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் அதேகருத்தை இன்னுந் தெளிவாக்கியுள்ளார் கீழ்க்கண்டபாடலில்;—

*"தாராரு மூவேந்தர் பயிலுந் தொல்லைத்*
*தமிழ்நாட்டப் புறந்திறைவன் சரணஞ்சார்ந்த*
*சீராருந் தொண்டர்களு மண்டரேத்துந்*
*திருத்தொண்டத் தொகையருளாற் செப்புங்காலத்*
*தேராருந் தொடையிலுரு திப்பாலப்பா*
*லெந்தை பிரானடி யடைந்தவியல்பினேரு*
*மாராத காதலுடையவர் களன்றே*
*வப்பாலு மடிச்சார்ந்த வடியார்தாமே."*

அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற நிற்கும் இறைவன், காலத்துக்குக்காலம், அக்கால முக்கிய தேவையைப் பூர்த்திசெய்யவும் மக்களின் பக்குவத்திற்குப் பொருந்திய உய்நெறியை உபதேசிக்கவும் குருமார்களை அனுப்புகிருன், அவர்கள் அனைவரும், பழையவர்களும் புதியவர்களும், உணர்வில் ஒருவரேயாவர், அவர்கள் எல்லாரிடத்தும் ஒளிர்வது அந்த இறைவன் ஒருவனே, ஆதலால், நமது கண்முன் உடல்கொண்டுலாவும் அடியார்களைப் போற்றுவது அவர்களுக்குமுன் தோன்றியவர்களைப் போற்றுவதேயாகும். அப்படியில்லாமல், நமது ஆணவச்செருக்கால், பிந்தியவர்களை நிந்திப்பது முந்திபோரையும் நிந்திப்பதேயாகும். சைவமக்களிடம் இந்த உண்மை உதயமாக, சுந்தரமூர்த்திநாயனுர் போன்ற மகாத்மாக்களின் குருபூசை விழாக்கள் உதவிபுரியுமாறு இறைவனை வழுத்துகின்ருேம்.

தம்பிரான் தோழரான நம்பியாரூரரைக் கடவுளாகவே நம்பிக் குருவாக உபாசித்த சடங்கவி சிவாசாரியாரது புதல்வியாரும் பெருமிழலைக் குறும்பநாயனுரும் சிவபதமடைந்த வரலாறுகளிலிருந்து அவர் தம்மையடைந்த பக்தர்களுக்கு வேண்டுவதை யருளவல்ல மூர்த்தியென்பது நன்குதெளியப்படும். அவர் புகழைப் பாடியும் பேசியும் நாமும் உய்கதியடைவோமாக.

—O-O—

*(சுந்தரமூர்த்திநாயனுர் திருநட்சத்திரமான ஆடிச் சுவாதி 6-8-54 அன்று பொருந்தியுள்ளது.*



# அன்றும், இன்றும், இனிமேலும்.

*[ஸ்ரீ சித்ரமுத்து அடிகளார் மணி வாக்குகள்.]*

முற்கால மனிதன் வஞ்சகமற்ற இதய ஒளியுடன் சஞ்சலமற்ற சம்சாரவாழ்க்கை நடாத்தி, அறநெறி யொழுகி, ஐம்புலனடக்கிப் புத்துயிர் பெற்று, அஞ்சாத வீரனுகத் திகழ்ந்து, அருந்தவம் புரிந்து, பொய்யாப் புகழெய்திப் புவியில் மறைந்தான், அவனே தெய்வ மனிதன்.

நுணுக்கமாகிய அணுக்கள் திரண்டு மனுக்களாக மாறி, மண்ணுலகில் பிறந்த வகையுணராமல், மனுக்கள் அணுக்களைப் பிடிக்க முயன்று, அணுக்களால் மனுக்கள் மடிந்தழிந்து போகின்றனர். இவைதான் நிகழ்காலத் தடுமாற்ற மனிதர்நிலை.

விளைவற்ற உஷ்ணபூமியாகிய பாலைவனத்திலுங்கூட பேரீச்ச மரங்களும் நெருப்புக் கோழிகளும் உற்பத்தியாகின்றன, கொடிய வஞ்சகம், பொருமை குடிகொண்ட நெஞ்சகப் பூமியாகிய நிலத்தில், வறண்ட புற்பூண்டுகளுக் கொப்பான சிறிது இரக்கங்கூடக் காண்பதரிதாகின்றது,

எதிர்கால மனிதன் நிலை எவ்வாறெனின், மந்திர தந்திரமிரண்டையும் ஒன்றுக இணைத்து, இயற்கை உடலோடு செயற்கையிறகுகள் அமைத்து, அந்தரவெளியில் சந்திராயுதந்தாங்கி உயரப் பறந்து, மனிதனும் மனிதனும் மற்போர்புரிய வரப்போகின்றனர், இவைதான் எதிர்கால மனிதர் நிலை.

மக்களில் பெரும்பாலோர் இன்னும் மழலைமதி உடையவர்களாகவே காணப்படுகின்ருர்கள். இருப்பினும், சிலகாலத்துள் மிகவும் சீர்திருந்திவந்துவிடுவார்கள். சிற்ருடையணிந்து தெருவீதியில் விளையாடுகிற காலம் தற்காலமெனினும், பருவவயதும் அறிவிலுயர்வும் வளர வளரச், சென்றதைக் கழித்து நின்ற நாட்களைக் கணக்கெடுக்கையில் யாவுஞ் சீரியமுறையில் ஜெயந்தரும் என்பதில் ஐயமில்லை.

## சுந்தரர் தேவாரம்.

குருவருள்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை [றையுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
அத்தாவுனக் காளாயினி யல்லேனெனல் லாமே.

அஞ்செழுத்துண்மை

மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க் கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

அடிமை

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவார டியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த அடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரில் அம்மானுக் காளே.

— — —

முற்பக்கத்தொடர்ச்சி:-

அறநெறி வாழ்வை நாடி அகமும் ஒன்றியுலவி, ஆனந்தச்சுக போகமுறவே, பகுத்தறிவுற்ற மனிதாம்சமாகப் பாரில் பிறந்தோமேயன்றி, தேடிச் சுகித்துச்செத்துப் போவதற்காகவல்ல. ஆதலால், உண்மையை நாட உடனே விழையுங்கள்! நாளை என்ற நன்னாளுக்காகக் காத்திராதீர்கள்.

அகக் கண்ணென்ற விழிப்பும், ஞானவிசாரப் பசியும், மனமௌன ஏகாந்தமும் பெற்றாலொழிய, நீங்கள் நினைத்த கருமத்தைச் செய்து முடிக்க முடியுமா? முடியாது போவதோடு, கருமயோகக் குறைவும் உங்களைத் தொடர்ந்தேவரும்.



## மகத்தான மரபு.

"சரவன்"

நாம் எந்த நற்காரியத்தைச் செய்தாலும் மரபு வழுவாமல் செய்தால்தான் அது சித்தி பெறும். மரபு என்பது என்ன என்ற கேள்வி எழும். இந்த இந்த காரியம் இப்படி இப்படி ஆரம்பித்து முடிக்கவேண்டும் என்று தொன்றுதொட்டு நடைமுறையில் ஏற்பட்ட ஓர் பழக்கம்.

உதாரணமாக நாம் உணவு உட்கொள்ளுகிறோம். முதலில் பருப்பு, சாம்பார், ரஸம், கடைசியில் மோர் என்று உட்கொள்ளும் முறைதான் மரபு, முதலில் மோர், அடுத்து ரஸம் கடைசியாகச் சாம்பார் என்றும் சாப்பிடலாம். அதுவும் நம் உடலில் ஜீரணமாக்கப்படும்தான். ஆனால் அது மரபு தவறிய செய்கையாகும். ஏன்? நகைக்கத்தக்க செய்கையும் கூட!

அதே போலத்தான் ஒவ்வொரு விஷயத்துக்கும் மரபு உண்டு. சொல்லுக்கும் மரபு இருக்கத்தான் செய்கிறது. மரபு தவறிய சொல் நகைப்புக்கு இடமாகும். ஒரு ஸ்திரீக்குக் குழந்தை பிறந்தால் அதை என்ன என்று குறிப்பிடுகிறோம்? அவள் குழந்தையைப் பெற்றாள் என்கிறோம். ஒரு பசு அதேகாரியத்தைச் செய்யும்போது பசு குழந்தையைப் பெற்றது என்றா கூறுகின்றோம்? பசு கன்றை ஈன்றது. என்போம். ஸ்திரீ கன்றை ஈன்றாள் என்றோ, பசு குழந்தையைப் பெற்றது என்றோ குறிப்பிடுவது மரபு அல்ல.

தெய்வ வழிபாட்டிற்கும் மரபு உண்டு. மரபு தவறிச் செய்யப்படும் வழிபாடு வழிபாடாகாது. தேவாலயங்களுக்குச் சென்று காலில் ஜோடுகளை அணிந்தவாறே ஆண்டவனை வழிபடுவதும், அங்கு ஊர்க்கதையைப் பேசுவதும் அவரவர்களுடைய சமச்சின்னங்களை நெற்றியிலும் உடலிலும் அணியாமல் தோன்றுவதும் மரபுக்கு விரோதம்.

நாம் உண்ணும் உணவையும் ஆண்டவனுக்கு நிவேதனம் செய்த பின்னரே உண்பதுதான் மரபு. அப்படி இன்றி உண்ணும் உணவு நம் உடற்பசியை வேண்டுமானால் போக்கலாம். ஆனால் ஆத்மபசியை அது தீர்க்காது. நாம் உண்ணும் உணவை ஆண்டவனுக்குப் படைத்துப் பின்னரே நாம் உட்கொள்ளும் தத்துவம் என்ன? எல்லாம் அவன் நமக்களிக்கும் பிரசாதம். "நீ அளக்கும் படிதான் ஐயனே! இந்த உணவு. இதை நீடித்து எனக்கு அளித்துவரவேண்டும்." என்று நன்றியுடன் கூடிய விண்ணப்பந்தான் அது,

முற்றொடர்ச்சி:.

# ஸ்ரீ கேதார் பத்திரி யாத்திரை.

தென்னிந்தியப் புகையிரத அதிகாரிகள் இடையிடையே உங்களிடம் உத்தரவுச் சீட்டு இருக்கின்றதா எனப்பார்க்கவருவார்கள். இலங்கையில் உத்தரவுச் சீட்டுப்பார்க்கும் ஒவ்வொருவரும் தாம் பார்த்ததற்கு அடையாளமாக ஒவ்வொரு துண்டைவெட்டி எடுத்துக்கொள்வார்கள். நல்லவேளையாக இந்தியாவில் அந்த வழக்கம் இல்லை. கையொப்பம்மாத்திரம் இட்டுக்கொடுத்து விடுவார்கள். அங்கும் வெட்டுகிற வழக்கம் இருந்தால் டில்லிபோய்ச் சேருகிறபோது இலங்கையில் பெற்ற உத்தரவுச் சீட்டு குசேலரின் சேலையைப்போலாகிவிடும். தற்செயலாக உங்களிடம் உத்தரவுச்சீட்டு இல்லாவிட்டாலும் பயப்படத்தேவையில்லை. பணம் இருந்தால் பரிசோதகரிடம் பெற்றுக் கொள்ளலாம். பணம் இல்லையென்று கையை விரித்தால் அடுத்தஸ்தானத்தில் உங்களை இறக்கிவிட்டுச்சென்று விடுவார்கள். அவ்வளவுதான் தண்டனை. இவ்வளவுதானே என்று எவரும் உத்தரவுச்சீட்டு இல்லாமல் பிரயாணம் செய்ய நினைத்து விடாதீர்கள்.

---

முற்பக்கத்தொடர்ச்சி,

*திருமணம் முதலிய சுபமான சடங்குகளுக்கும் மரபு உண்டு. அந்த மரபு வழுவாமல் அவை நடத்தப்படுமானல் அவற்றின் பலனும் மகத்தானதாகத்தான் இருக்கமுடியும். பலன் வேறுவிதமாய் இருக்குமானல் அதற்குக் காரணம் மரபு தவறி அவை நடத்தப்பட்டிருக்குமேயல்லாது வேறல்ல.*

*இவ்விதம் மரபு என்பது ஆதிகாலந்தொட்டு வாழையடி வாழையாக வந்ததொரு நல்லபழக்கம். அந்த மரபு இன்று தேய்ந்துகொண்டுவருகின்றபடியால்தான், நம்மிடையே பல தீய சக்திகள் கிளம்பித் தலைவிரித்தாடுகின்றன. கன்னு பின்னுவென்று சிலர் பேசவும் பத்திரிகைகளில் எழுதவும் நேர்ந்தது. 'மரபு' என்னும் சொல் ஆதி காலந்தொட்டு நல்ல சம்பாத்தியத்தையே குறிப்பிட்டு வந்ததற்கு மாருக இன்று சிலர் நாவையும் தங்கள் பேனவையும் மனம்போன போக்கில் விடுவது மரபாகிவிட்டது,*

*இந்த விபரீத மரபுமறைந்து, நமது பண்பாடு கலாச்சாரம் இவைகளின் அடிப்படையில் தோன்றிய மகத்தான மரபு, மீண்டும் நம் எல்லோரையும் ஆட்கொள்ளும் காலம் சீக்கிரமே வராதோ?*



இலங்கையிலும் பார்க்கத்தென்னிந்தியாவின் வெயில்சிறிது அதிகமாகவே இருக்கும். மானுமதுரை வரையில் ஏறக்குறையப் பாலைவனச்சுவாத்தியமாகவே இருக்கும். யாழ்ப்பாணத்தார் பிரயாணம் செய்யும் பொழுது தம்மூரில்கண்ட மரஞ்செடிகொடிகளையேதான் காண்பர் அதனல் தம்மூருக்கே வந்துவிட்டதைப்போன்ற உணர்ச்சியைப்பெறுவார்கள்.

இரவு 9 மணியளவில் திருச்சிப்புகையிரத நிலையத்தைச்சேர்வீர்கள். அங்கு அரைமணித்தியாலம் வரை புகையிரதம் தங்குகின்றது. இந்தியாவிலுள்ள பெரிய புகையிரதச் சந்திகளில் இதுவு மொன்று. உங்களுக்கு வேண்டிய சாப்பாட்டுவகைகளெல்லாம் அங்கு உண்டு புகையிரதம் புறப்படுமுன் சாப்பிட்டு விடலாம். விடிந்தால் சென்னைபோய்ச் சேர்ந்து விடுவீர்கள்.

கொழும்பைப்பார்த்தவர்களுக்குச் சென்னையைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. கொழும்பைக் கொண்டு சென்னை மிகவிஸ்தீரணமானதும் பெரியதுமென்று கற்பனைபண்ணிப் பார்க்கவேண்டியதே. ஆனல் கொழும்புமா நகரில் பார்க்கக் கூடிய மோட்டாரின் தொகையைச் சென்னை மாநகரில் பார்க்க மாட்டீர்கள். சென்னையில் மாத்திரமல்ல இந்தியாவின் எந்தப் பட்டினங்களிலுமே காண மாட்டீர்கள். உத்தேசமாகச் சொல்கிறேன் சென்னை, பம்பாய், கல்கத்தா டில்லி இந்த நான்கு பட்டினங்களிலும் உள்ள மோட்டாரை ஒன்றுசேர்த்தாலும் எங்கள் கொழும்புமாநகர் மோட்டாரின் தொகையில் கூடிவிடுகின்றது. இந்த வெளிமயக்கில் நாம் பெருமைப்படலாம், ஆனல் இவ்வளவு பணமும் சிறிய இலங்கையை விட்டு வெளியேறிவிட்டதே என்பதை நினைத்துப் பார்ப்பவர்கள் எத்தனை பேர்?

சென்னையிலிருந்து வடக்கே செல்லும் புகையிரதங்கள் எல்லாம் மாலை நேரத்தில் தான் புறப்படுகின்றன. ஆதலால் மாலை வரையில் புகையிரதத்தானத்தில் காத்திருக்கவேண்டியதில்லை. நல்ல விடுதிச்சாலைகள் இருக்கின்றன. போக்குவரவு வசதியும் அதிகமுண்டு. ஆதலால் காலையில் புகையிரதத்தைவிட்டிறங்கியதும் டில்லிசெல்வதற்கு உத்தரவுச்சீட்டைப்பெற்றுக் கொண்டு வெளியேவந்தீர்களானல் பலவிதவாகனங்கள் உங்களுக்குச் சேவைசெய்யக்காத்

துகிற்கின்றன. சேவை என்றதும் சும்மா ஏறிச்சென்று இறங்கிவிடலாமெனக் கருத்துக்கொண்டு விடாதீர்கள். ஆளைப்பார்த்தவுடனே நீங்கள் எங்கு போகப்போகிறீர்கள் என்பதையூகித்து விடுவார்கள். ''சாமி! நீங்கள் வடக்கே போகிறவர்கள் தானே. வாருங்கள் நல்ல ஹோட்டலில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்'' என்று உங்கள் சாமான்களையெல்லாம் வண்டியில் ஏற்றிவிடுவான் வண்டிக்காரன். இதுவரைச்கும் நீங்கள் வாயடைத்துப்போய் நின்றே விடுவீர்கள். நீங்கள் சென்னைக்குப் புதியவர்கள் என்பதை எவ்விதத்திலும் காட்டிக்கொள்ளவே கூடாது. வண்டிக்காரனிடம் முதலில் கூலியைப் பேசிக்கொள்ளுங்கள். தங்குகிற ஹோட்டலின் பெயரை புகையிரதத்தில் வரும்போதே புகையிரதச் சிநேகிதர்களிடம் அறிந்து வைத்திருங்கள் கூலிபேசாமல் ஏறினீர்களானால் இறங்குகிற இடத்தில் வண்டிக்காரன் இரண்டு மூன்று மடங்கு பணம் வசூலித்து விடுவான் அரைமைல் தூரத்தில் செல்லவேண்டிய பிரயாணத்தை இரண்டுமைலாக நீட்டியும் விடுவான். குறையப்பேசிக் கூலிகொடுக்கும்போது ஒரு அணுகூட்டிக்கொடுங்கள், உங்கள்கருணையைப் பற்றி வண்டிக்காரன் எப்போதுமே மறக்கமாட்டான். அளவுகருவி வைத்தமோட்டாரில் பிரயாணம் செய்தால் பேரம்பேசும் தொந்தரவு கிடைக்காது. இறங்கினவுடன் அளவு கருவி காட்டும் பணத்தைக்கொடுத்து விடவேண்டியதே.

இமாலயத்தின் அடிவாரம் சென்னையிலிருந்து சுமார் 1700 மைல் தூரத்தில் இருக்கிறது. பம்பாய், அல்லது கல்கத்தா மார்க்கமாகச் சென்றால் தூரம் இன்னும் கொஞ்சம் அதிகமாகும். நாட்டிற்கு நடுவே இருதயம் போன்று, தலைநகராக விளங்குகிறது டெல்லி. சென்னையிலிருந்து நேராக டெல்லி செல்வதே சுருக்கமான வழியாகும். சென்னையிலிருந்து டெல்லிபோய்ச்சேர 50 மணித்தியாலங்கள் தொடர்ந்தாற்போல் புகையிரதத்தில் பிரயாணஞ் செய்யவேண்டும்.

வடதிசை நோக்கிப்பனிக்காலத்தில் பிரயாணம் செய்யும்போது ஒருவித அனுபவம்; வேனிற்காலத்தில் போனால் மற்றொருவித அநுபவம்; இரவுதோறும் ஒருபருவத்தில் குளிர் அதிகரிக்கிறது. மற்றொருபருவத்தில் இரவும்பகலும் ஒரே குளிராயிருக்கும். தென்னிந்தியாவின் வெப்பம் இலங்கையின் சில இடங்களிலும் பார்க்கக் கூடியதாய் இருந்தாலும் அவ்வளவு கொடுமையானதன்று. வடக்கே வெயி



ஓம்

## சொப்பனத்திலாகிலும்...

எடுப்பு.

சொற்பனத் திலாகிலும் இப்பாவிக் கிரங்கியோர்
சூட்சுமம் சொல் லையனே! குருபரனே! (சொற்ப)

தொடுப்பு.

அற்புத ஜோதியை அகண்ட சுகவாரியைக்
கற்பனை கடந்தவோர் பொற்பத மடைந்துய்ய [சொ]

முடிப்பு.

காடு மலைகளெல்லாம் ஓடித் திரிந்தலைந்து
கணத்திலும் ஓரிடம் நிலைத்தறி யாத மனக்
காடக் குரங்கையுள் ஆடாத தியானத்தில்
கட்டிப் பிணித் தெனது இட்டப் படியே ஆட்ட [சொ]

"பரமஹம்ஸதாஸன்"

---

முற்பக்கத்தொடர்ச்சி:—

லும் அனற்காற்றும் சேர்ந்து மனிதனை வாட்டுகின்றன. இராஜபுதனப்பாலைவனத்தினின்று வீசும் அவ்வனற்காற்று பெரிதும் உயிருக்கே ஆபத்து விளைக்கக்கூடியது. இளவேனிற் காலத்திலேயே சில இடங்களில் 114° வரை உஷ்ணம் சென்றுவிடுகின்றது. அப்படியானால் முதுவேனிற்காலத்தைப்பற்றி கற்பனை செய்து பாருங்கள். சில பறவைகள் வெப்பந்தாங்க முடியாமல் மரத்திலிருந்து மயங்கிச் செத்து விழுவதுமுண்டு. உச்சிவேளைகளில் எல்லா உத்தியோகங்களும் நிறுத்தப்படுகின்றன. காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரையில் வீடுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கும். மாந்தர் வீதிகளில் தலை நீட்டமாட்டார்கள். ஒவ்வொருவரும் ஒருமண் கூஜாத் தண்ணீரும் ஒரு விசிறியும் தம்முடன் வைத்திருப்பர். விசிறியை வீசஒருகைக்கும் தண்ணீரைப்பானம் பண்ண மற்றொருகைக்கும் ஓயாது வேலை இருந்து கொண்டே இருக்கும். பருகுகின்ற அவ்வளவு நீரும் எங்கே போய் மறைகின்றதென்று வியப்பு உண்டாகக்கூடும். அவ்வளவும் சூரிய வெப்பத்தால் சுவாசத்தோடு ஆவியாகப் போய் விடுகின்றது. அத்தகையமாளாத வெயிலில் புகையிரதப் பிரயாணம் மட்டும் ஓயாது நடைபெறுகிறது. எங்கள் பிரயாணத்தில் உண்டாகும் முதலாவது சோதனை இதுவே.

[தொடரும்]

# பரவையார்

[ஆ. சிவலிங்கனார்]

திருவாரூரிலே உருத்திர கணிகையர் குலத்திலே தோன்றியவர் நம் அம்மையார். சிவனிடத்தன்புடையவர். நாளும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு வரும் வழக்கம் உடையவர். ஒரு நாள் அவ்வாறு வழிபடச் சென்றிருக்கையில், திருநாவலூரில் தோன்றிச் சிவபெருமானால் தமக்கு நடக்கவிருந்த கலியாணத்தைத் தடுத்து ஆட்கொள்ளப்பட்டுப் பல தலங்களையும் வணங்கி வரும் சுந்தரர், திருவாரூர்க் கோவிலையும் வணங்க வந்தவர் தற்செயலாய்ப் பரவையாரைப் பார்த்தார். பரவையாரும் பரமனடியாரைப் பார்த்தார் "இருவரும் மாறிப் புக்கிதயம் எய்தினர்;" ஒருவரைப் பற்றியொருவர் அயலவர் மூலம் அறிந்து கொண்டனர். சிவபிரான் திருவருள் முன்னிற்க, அந்தணர் குலத்தவராகிய சுந்தரர் கணிகையர் குலத்தவரான பரவையாரை மணந்து கொண்டார். இருவரும் ஆரூரிலேயேயமர்ந்து இல்லறத்தை இனிது நடாத்தினர். அம்மையார் அறவோர்க்களித்தும், அந்தணர் ஓம்பியும், துறவோர்க் கெதிர்ந்தும், விருந்தெதிர் கொண்டும் மனையறத்தை மாண்புறுத்தி வந்தார். தமக்கு நாளைக்கு வேண்டும். என்று வையாது விருந்தளித்து வந்தார்.

குண்டையூர் என்னும் ஊரிலே வேளாண் குலதிலகராய் ஒரு பெரியார் விளங்கினார். அவர், சுந்தரரைச் சிவபிரான் தடுத்தாட்கொண்டார் என்பது கேட்டுச் சுந்தரரிடம் அன்புடையவராய் அவரைக் கண்டு வணங்கிய தோடன்றிச் செந்நெல் பருப்பு முதலிய உணவுக்குரிய பொருள்களையும் நாளும் பரவை மனைக்கு அனுப்பிவந்தார். பரவையாரும்வருவனகொண்டுவளமுறவிருந்தளித்தனர். இங்ஙனம் அனுப்பிவந்த காலத்தில் மழை வறங் கூர்ந்துமா நிலம் வளம் சுருங்கியது. மிக்க நெல் விளைத்தெடுப்பதற் கில்லாமல் குண்டையூர்ப் பெரியார் வருந்தினார். ஒருநாள், 'வன்தொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க இன்று குறைவாகியது என் செய்கேன்" என்று மிக்க கவலையினால் உணவு கொள்ளாமல் அன்றிரவு துயில் கொண்டார். அவர் கனவில் இறைவன், 'சுந்தரனுக்களிக்கவேண்டி நினக்கு மிக்க நெல் தந்தோம்' என்றார். பெரியாரும்



விடியலில் உணர்ந்தெழுந்து நெல் மலைவானளாவ ஊரெங்கும் இருப்பது கண்டதிசயித்தார். ஊரினரும் அதிசயித்தனர். 'இவ்வளவு நெல்லையும் ஆரூருக்கு எவ்வாறெடுத்துச் செல்ல முடியும்? இதனைச் சுந்தரரிடம் கூறுவோம்' என்று புறப்பட்டார் ஆரூருக்கு. ஆரூரில் இறைவன் சுந்தரரிடம் நெல் அளித்ததைக்கூறிக் குண்டையூர் செல்லச்சொன்னார். சுந்தரரும் குண்டையூர் நோக்கி வந்தார். இடையில் இநவரும் சந்தித்தனர். சுந்தரரிடம் பெரியார் கூறினார் தம் கருத்தை. சுந்தரரும் இறைவனாலேயே இதனைக் கொண்டு சேர்க்க ஆள்தர முடியுமென்று அருகிருந்த திருக்கோளிலி என்ற ஊருக்குச் சென்று இறைவனைப்பாடி ஆள்வேண்டினார். இறைவன் வாக்கு 'இரவில் பூதங்கள் நெல்லைத் திருவாரூரில் சேர்க்கும்' என்றதைக் கேட்டு ஆரூர் வந்து, பரவையாரிடம் நிகழ்ந்தன கூறி மகிழ்ந்தார். இரவில் பூதங்கள் நெல்லை ஆரூரில் சேர்த்தன. ஆரூர் எங்கும் நெல் நிறைந்து நடப்பதற்கு வழியின்றி மிகுந்தன. சாலையில் யாவரும் எழுந்து பார்த்து அதிசயித்தனர். பரவையாரும் பார்த்துமகிழ்ந்து, 'தெருவெல்லாம் அடைத்த நெல்லை அவரவர் வீடுகளில் வாரி வைத்துக் கொள்ளுக' என்று பறையறைவித்தார். அவ்வாறே தங்கள் தங்கள் மனைக்கு எதிரே உள்ள நெல்லை அவரவர்கள் தத்தம் மனைகளில் நிரப்பிக் கொண்டனர்.

*"இன்றுங்கள் மனை எல்லைக் குட்படு நெற் குன்றெல்லாம்*
*பொன்தங்கு மாளிகையிற் புகப் பெய்து கொள்க"*

என்று பறையறை வித்ததாகச் சேக்கிழார் கூறியுள்ளார். ஊரவர் நெல்லை மனைக்கண் நிரப்பிய தோடன்றி ஆங்காங்கு குதிர்களிலும் நிரப்பி வைத்து மகிழ்ந்தனர். அவர்தம் மகிழ்ச்சிகண்டு அம்மையார் மகிழ்ந்தார்.

ஊர் நிறைந்த நெல்லை வைக்க இடமில்லாது போகவே தானம் பண்ணிவிட்டார் போலும் அம்மையார் என்றுஎண்ணி விடக்கூடாது. அத்தகையர் அல்லர் அவர் உள்ளத்தோடியைந்தே பறையறைவித்தார். அக்குறைபாடுடையவரானால் முதலில் தமக்கு வேண்டியன கொண்டு, பின் அவரவரும் இவ்வளவு இவ்வளவு நெல் அளந்து விடவேண்டும் என்று கூறியிருப்பார். "நெற் குன்றெல்லாம் கொள்க" என்று கூறியதை நாம்கவனித்தல் வேண்டும். தேவைக்கு

வேண்டியனவே கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினர் அம்மையார் அதனால் தான், "உங்கள் மனை எல்லைக்கு உட்படு நெற்குன்றெல்லாம் கொள்க" என்றார். மனை எல்லைக்கப்பாற்பட்டனவற்றில் ஆசைகூடாது என்பது பெறப்படும். மனையெல்லை—மாளிகையளவு. அவரவர் செல்வ—வறிய நிலைகளுக்கேற்ப அமைந்திருக்குமன்றோ? அவரவர் தேவைக்கேற்ற அளவிலேயே நெற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'மனையெல்லை'யைக் குறிப்பிட்டார். அம்மையார் மனையறத்தை மாண்புற மேற்கொண்டவர். மனையகத்துப் பொருள்களை அவர் விருப்பப்படி பயன் படுத்தினார். சுந்தரரைக்கேட்டுச் செய்ய வேண்டியதில்லை. சுந்தரரும் அவ்வாறு உரிமைதந்திருந்தார். மனைவியார் விருப்பப்படி நடப்பவர். மனைவியார் வேண்டுவனவற்றை இறைவனிடம் பாடிக்கேட்டுப் பெற்றுத்தருவார். இவரது வரலாற்றில் அவ்வாறு நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் உண்டு அம்மையார் விரும்பினவற்றைக் கொண்டுவந்து கொடுப்பது அவரது கடமை. மனையற மாட்சிமை அம்மையார் கடமை.

பெருஞ் சித்திரனார், குமணனிடம் பாடிப்பரிசில் நிறையப்பெற்றுவந்து மனைவியிடம் "நீ இப்பொருளை நின்னால் விரும்பப் பட்டவர்க்கும், நின் சுற்றத்தார்க்கும். கடனாகப் பெற்று வந்தவர்க்கும், யாவர்க்கும் இல்லையென்னாமலும், வைத்து நாளைக்கு நன்றாக வாழ்வோம் என்னாமலும், என்னையும் கேட்க வேண்டியதில்லாமலே நின் விருப்பப்படி எல்லோர்க்கும் கொடு" என்றாராம் புறப்பாட்டொன்று இவ்வாறு கூறுகிறது. இவ்வகையில் அம்மையார் தம் விருப்பப்படியே நெல் மலையினைத் தமக்கென வைக்காமலும், எதிர்காலத்திற்கு எனக்கொள்ளாமலும், இன்னார்க்கென வரையறுக்காமலும் எல்லார்க்கும் எல்லாவற்றையும் 'கொள்க' என்று கொடுத்தனர். என்னே அம்மையாரின் மனமாண்பு! தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த நம் அம்மையார் வரலாறு விரிந்ததொன்று, ஈண்டு ஒரு கருத்தே எழுதப்பட்டது.



## சமயம்.

(வல்லிபுரம்)

முன்னோர் உலகில் சமயங்களை உற்பத்தி செய்தது உலகைத் திருத்தச் செய்யும் நோக்கமாகவே. மனிதன் ஆலயங்களுக்குப் போகுமுன் செய்யும் கடமைகளெல்லாம் அவனைத் தூய்மை செய்யும் நோக்கமாகவே அமைந்திருக்கின்றன. அங்குச் சென்று பயபக்தியுடன் கடவுளை நினைப்பதால் கெட்ட செயல்களை நீக்கிக்கொள்ள முயல்கிறான். அதனாலேயே மனிதன் பலனடைகின்றான். சமயங்களும் கோவில்களும் உலகில் தோன்றியதன் நோக்கம் உலகைத்திருத்துவதற்கேயன்றிச் சமயச் சண்டைகள் செய்யத் தூண்டுவதற்கல்ல. எச்சமயத்தவரானாலும் அவன் பிறந்த சமயத்திலிருந்துகொண்டே அதை அவனுக்கு ஒரு வழிகாட்டியாகக்கைக்கொண்டு அவனையும் அவன் மனசையும் தூய்மை செய்து கொள்ளமுடியும். சமயங்களின் நோக்கம் மனிதனை நற்கருமங்களில் ஈடுபடச்செய்து அதன் பயனை அநுபவித்து இன்புறச்செய்வதேயன்றி வீண்குதர்க்கம் பேசி சமயச்சண்டையைத் தூண்டச் செய்வதல்ல.

### இறைவன்.

தன்னைத் தூய்மை செய்து கொண்டவன் உண்மையில் இறைவன் எங்குள்ளான் என அறிய முடியும். "எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன் எல்லாஉடலும் இறைவன் ஆலயமே" என்னும் சுத்தானந்தர் வாக்கிற் கிணங்க எல்லா இதயத்திலும் இறைவன் உள்ளான் அவன் இல்லாவிடில் மனிதன் பிணமாவான். மூக்கில் கண்ணாடியிருக்க வீடெங்கும் தேடியலைவது போல் தன்னுள் இறைவன் இருக்க அவனைத்தேடி எங்கும் காணமுடியாது. மனிதன் உலகெங்கும் தேடியலைகிறான். அவன் இதயத்தில் இருந்துகொண்டு நாங்கள் கெட்ட செயல்களில் ஈடுபடும் போதெல்லாம் எங்களைத் தண்டித்துத் திருத்துகிறான். உடலாகிய பொம்மையை உலகமாகிய நாடகமேடையிலாடிக்காட்டி முடிந்ததும் போய்விடுகிறான். அவன் வெளியேறினவுடன் பிணமென்று அடக்கம் செய்துவிடுகிறோம். அந்தப்பிணம் நான் அல்லவே! உண்மையில் நான் யார்?

# அன்னை பராசக்தியின் தவப்புதல்வர் ஸ்ரீ சிவானந்தர்.

நாம் அனைவரும் அகில மாதாவாகிய அன்னை பராசக்தியின் புதல்வர்கள் என்பதை மறந்தோமா? அல்லது அன்று அன்னையின் பிண்டத்திலிருந்து இப் பிரமாண்டமான மாயையின் அதி உல்லாச, சௌந்தரிய, லாவண்யமான மாயா லீலா விநோதங்கள் நிறைந்த இப்புவியில் பிறப்பதற்குமுன் நம்மை எந்நாளும் காத்துக்கொண்டிருக்கும் தரணியின் தந்தையும், தயாநிதியுமாகிய பரந்தாமனிடம், நாங்கள் உம்மை எந்நாளும் இமைப்பொழுதும் மறவோம். ஆனால் நீர் நாங்கள் உம்மை மறவாதிருக்க அருள் புரியவேண்டும் என்று கூறியதை மறந்தோமா? இல்லை! இல்லை! பின்.

நாமும் பரந்தாமனை மறந்துவிட வில்லை, பாராளும் பரந்தாமனும் நம்மை மறந்து விடவில்லை. ஆனால் யாரே மறந்தார்கள்? உலகில் மாயையின் அதிரூபத்தையும், கண்டதே காட்சி, கொண்டதே

---

முற்பக்கத் தொடர்ச்சி:-

## அவனை அடைதல்.

மனிதன் தன் மனசை அடக்கித் தியானம் செய்து பழகுதல் தன் நன்மைக்காகவே. வயசில் முதிர மனிதனால் தன் மனக்குதிரையை அடக்கியாள முடியாமற் போய்விடுகிறது. அதனால் இரவில் நித்திரை செய்து இளைப்பாறவும் முடியாமல் துன்புறுகிறான். அவன் தன் நினைவுகளை ஒடுக்கிப் பழகினால் அதனால் தான் ஆறுதலடைவதுமல்லாமல் கடவுளை மனதிற் கொள்வதற்கும். வசதி ஏற்படுகிறது. சமயத்தின் உதவியால் அடையத்தக்க இச்சுகங்களை அடையாது தன் நிழலையே எதிரியென்று நினைத்து அதனுடன் சண்டையிடும் மூடனைப்போல் சமயச்சண்டை செய்வது எவ்வளவு அறியாமை. மனசை அடக்கி ஆளும் வல்லமை பெற்றவன் தனக்குள் ஒரு சக்தி தனக்கு உதவியாக இப்பதை உணர முடியும். அதுவே ஆத்மா அதை ஜோதியாக்கித் தனக்கே வெளிச்சத்தைத் தேடிக் கொண்டவனுக்கு உலகில் ஒருபயமும் தோன்றாது. அவன் மனம் சாந்தியடையும்.



கோலமென்றபடி நம்முள் அடங்கியிருக்கும் அரிய சக்தியைத் தட்டியெழுப்பி விட்டு, மாயையில் பந்தங்களையும், லீலைகளையும் வெல்லும் மார்க்கத்தை உபதேசிக்கும் சத்குரு நாதரை அடைய வழியறியாது நம் மனம் மயங்கிக்கொண்டிருக்கிறதே தவிர, நாம் பரமனை மறந்து விடவில்லை அல்லவா?

நாம் அன்னையளித்த உட்சக்தியை உணராதவரையில் மதிமயக்கம் எல்லோருக்கும் ஏற்படுவது சகஜம். அன்னையின் அன்பிற்கு ஈடேது உலகில். அன்பே அன்னை.

இன்ப துன்பமென்னும் ஓயா அலை நிறைந்த சம்சார சாகரத்தின் அலைகளால் மோதி அங்குமிங்கும் அல்லோலப்பட்டு, வாழ்நாளில் **"வாழ்க்கை"** என்னும் படகை நடத்திச் சென்று பேரின்பமென்னும் சாம்ராஜ்ய கூரையை அடைந்து ஆனந்தமாயிருக்க வழியறியாது தவித்துக் கொண்டிருக்கும் தனது அருமைப் புதல்வர்களைப் பார்த்து மனந்தளராத அன்னை பராசக்தி மாதவத்தின் பயனாகக்கிடைத்த சிவானந்த அருந்தவப் புதல்வரை நமக்கு அளித்திருக்கிறார். அன்று நம் அன்னை ஜாம்பவனை உலகிற்களித்து ஆஞ்சநேயருடைய ஆத்மீக சக்தியை தட்டி எழுப்பியதனால் மாபெரும் கடலைத்தாண்டி நித்யானந்தமென்னும் ஸீதாதேவியை ஆத்துமாவென்னும் ராமபிரானிடம் சேர்ப்பித்து மக்களுக்கு என்றும் நிலையான ஆத்துமானந்தத்தைக் கொடுத்தார். கொடுத்துக் கொண்டுமிருக்கிறார். அதுபோல இக்கலியுகத்தில் ஜகம் போன்றும் ஜகத் குரு சுவாமி சிவானந்தரை ஜாம்பவனை அளித்திருப்பது உண்மையில் நாம் அனைவரும் செய்த அரிய தவமேயாகும்.

சுவாமி சிவானந்தர் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக பாரத நாட்டு மக்களுக்கும் அலைகடல் சூழ்ந்த அயல்நாட்டினர்க்கும் அன்னாருடைய திவ்விய தரிசனமும் அருள் உபதேச மொழிகளும் ஒவ்வொருவருடைய உள்ளத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் ஆத்துமீக உணர்வைத்தட்டியெழுப்பி ஜாம்பவன் ஆஞ்சநேயரை கடலைத் தாண்டும்படி செய்தது போல், மாய அலையில் மோதி தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களின் மனமயக்கத்தை தெளிவு படுத்தி மாயா சமுத்திரத்தை தாண்டச் செய்து என்றும் அழியா அமரத்துவமும்.

## கண்ணனின் உபதேசங்கள்.

*[ தெ-ஆ. டர்பன், திரு. ச. மு. பிள்ளை ]*

பாரத பூமியிலே பகவான், கண்ணனாக அவதாரம் செய்தார். அந்தக் கண்ணனின் சரித்திரமானது எக்காலத்திற்கும், எந்த மனப்பான்மைக்கும் பொருந்திய திவ்விய சரித்திரமாகும். கண்ணனைக்குறித்துக் கூறப்படும் சம்பிரதாயக் கதைகள் பலவற்றைக் களைந்து தள்ளிவிட்டு, அந்தச்சரித்திரத்தைப் பார்ப்போம்.

கண்ணன் திருவிளையாடல்களைக் குறித்து பல சிறிய கதைகள் சொல்லப்படுகின்றன. அப்பேர்ப்பட்ட கதைகளெல்லாம் இக்காலத்து வாலிப மனதுக்குப் பிடிக்காது. இக்காலத்தில் வாலிபர்களுக்குப் புதிய ஆவேசம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கண்ணன் சரித்திரத்தையும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நவதிருஷ்டிக்குத்தக்கபடி வியாக்கியானம் செய்யவேண்டும்.

அன்று குருக்ஷேத்திரத்தில் ஸ்ரீ கண்ணபிரான் சொன்ன உபதேசங்களை இன்று தோன்றியிருக்கும் புதியசகாப்தத்திற்குப்பொருந்தியவாறும் புதிய அறிவுக்குத்திருப்தியாகவும் திருத்தியமைக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். கண்ணனுடைய சரித்திரத்தை நாம் படிக்கும் போது, அவை கட்டுக்கதைகளாகத் தோன்றாமலும் குணதோஷ விமர்சனத்திற்குச் சளைத்துப்போகாமலும், படிப்பவர்களுடைய அறிவைத் திருத்தவும், வளர்க்கவும் கூடியதாகச்செய்ய வேண்டும்.

ஆனால், நான் ஒன்று மாத்திரம் நிச்சயமாகச் சொல்வேன். நாளுக்கு நாள்; தலைமுறைக்குத் தலைமுறை கிருஷ்ணன் உபதேசமானது பிரசித்தி அடைந்து வருகிறது; அதனுடைய கீர்த்தியும் வளருகின்றது. அதைப்பின்பற்றும் மக்கள்குழாம் பெருகுகின்றது.

---

*முற்பக்கத் தொடர்ச்சி:-*

ஆத்மசாந்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஸத் குரு சிவானந்த மகராஜ் அவர்களை சித்தத்தில் பதிவு செய்து கொண்டு வாழ்வின் பெருமையையும், வாழ்வின் லட்சியத்தையும் அடைவோமாக.

*சிவானந்த மகராஜ் கி. ஜய்.*



பாரதநாட்டில் மாத்திரமல்லாமல் கடல்கடந்த அயல் நாடுகளிலெல்லாம் கண்ணனின் குழலோசை மக்கள் மனதைப் பரவசப்படுத்துகிறது. அயல் நாடுகளிலே கண்ணன் சரித்திரத்தைக் கேட்டு அவனிடம் அன்பும் பக்தியும் ஊறப்பெற்றவர்கள் எத்தனையோ கோடி மக்கள்.

கண்ணனின் உபதேசத்தை வங்கதேசத்தில் அவதரித்த சைதன்யர் அன்பு மதமாக மக்களுக்கு உபதேசித்தார். அந்த மதத்தின் அழகில் வங்க மக்கள் மனம் ஈடுபட்டது. அதன் பயனாக வங்க நாட்டில் புதிய காவியங்களும், கிரந்தங்களும் புத்துயிர் பெற்று விட்டன. அதுமட்டுமா? மேல் நாட்டிலே கிறிஸ்தவபக்தர்கள் பலருங்கூட, மேற்சொன்ன அன்பு மதத்தைப் பருகி ஆனந்தக்கடலில்ஆழ்ந்தார்கள். கிறிஸ்தவ பக்தர்களுக்கு ஏசுநாதரிடத்தில் எவ்வளவு பக்தியோ, அவ்வளவு பக்தி இந்துபக்தர்களுக்கு கிருஷ்ணபகவானிடம்.

கடவுள்ஒருவரேயாவர். அவரை கிறிஸ்தவர்கள் ஏசுநாதர் என்னும் பெயரால் துதிக்கின்றனர். அதே கடவுளைத் தான் இந்து பக்தர்கள் கண்ணன் என்னும் பெயரால் துதிக்கின்றனர். இந்த உலகத்து மக்கள் சமூகத்தில் சமாதானமும், பரஸ்பர அன்பும், நேசப்பான்மையும் திகழ வேண்டுமானால், ஒருவரை யொருவர் துவேஷிக்கும் மனோபாவம் ஒழியவேண்டும். அன்பு யதார்த்தமான அன்பாயின், துவேஷமே இருக்க முடியாது.

இனி வருங்காலத்து சமுதாயத்தார் கண்ண பெருமானை, அவர் உலகிற்கு உபதேசித்த பகவத்கீதைக் காகவும், அவர் எளியோனின் நண்பனாகநடித்துக்காட்டிய அந்தத்திருவிளையாடலுக்காகவும்,போற்றித்துதிப்பர். கண்ணனுடைய சரித்திரத்திலேஇவையிரண்டுமே பிற்காலத்தார் போற்றும் குணாதிசயங்களாக இருக்கும்.

இன்று இந்தியாவில் நாம்கிருஷ்ணனுடைய நாமத்தைமாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பூஜை செய்கிறோம். அவர் உபதேசித்த தத்துவங்களை நாம் அநுட்டிப்பதில்லை. அந்தத் தத்துவங்களை அநுட்டிப்பதை விட பெரியதோர் பூஜை கண்ணனுக்கு வேறு இல்லை. அதை நாம் அவசியம் செய்ய வேண்டும்.

*[ இது சாது வாஸ்வானி அவர்கள் எழுதியதன் தமிழாக்கம் ]*

# சௌரமதம்.

ஆறு சமயங்களுள் சௌரமதம் என்பது ஒன்று. சூரியனை முழுமுதல் தெய்வமாக வணங்குபவர் சௌர மதத்தவர் ஆகின்றனர். இன்றைக்கு இந்தியாவில் மற்ற ஐந்து மதங்களும் மக்கள் தொகையில் உருவெடுத்திருப்பதைப் போன்று சௌர மதத்தினர்களது தொகையைக் கண்டு பிடிக்க முடியாது. சூரிய வெளிச்சம் எல்லாத்திசைகளிலும் பரவி மற்றப் பொருள்களிற் பொருந்திவிடுவது போன்று சௌர மதம் எல்லா மதங்கட்குள்ளேயும் அந்தர்த்தானமாய் விட்டது. ஆக, சூரியனை வணங்குவது இந்துக்கள் அனைவருக்கும் பொதுவானது. உலகமுழுதுமே ஏதேனும் ஒரு விதத்தில் சூரியனைப் போற்றி வருகிறது. கடவுள் என்று கருதினால் தான் அவர் போற்றப் படுகிறார் என்பது உண்மையல்ல. நமக்குப் பயன்படும் பொருள் நமக்கு உயிர்கொடுக்கும் பொருள் இப்படியெல்லாம் கருதி ஏதேனும் ஒன்றைப் பாராட்டினால் அப்பாராட்டுதலுக்கும் ஆராதனை என்று பெயர். ஏதேனும் ஒரு விதத்தில் உயிர்களெல்லாம் சூரியனை ஆராதித்து வருகின்றன.

சூரியனுக்குரிய மந்திரம் காயத்ரீ என்னும் பெயர் பெறுகிறது. வேதத்திலுள்ள மந்திரங்களிலெல்லாம் மிகமிகப் பவித்திரமானது காயத்ரீ. காயத்ரீ மந்திரங்கள் பலஇருக்கின்றன. ருத்ர காயத்ரீ, தேவி காயத்ரீ, விஷ்ணு காயத்ரீ இப்படியெல்லாம் அவைகள் பெயர் பெறுகின்றன. அவைகளுள் முதன்மை பெறுவது சூரியகாயத்ரீ. இந்தியாவில் காஷ்மீரத்திலிருந்து 'கன்னியா குமரி வரையும் சூரியகாயத்ரியை ஜெபிப்பவர்களையும், தியானிப்பவர்களையும் ஏராளமாகக் காணலாம் எல்லாச் சமயத்தவர்களுக்கும் இது பொதுவானது. ஒரு மரம் முழுதும் விதையில் அடங்கி இருப்பது போன்று வேதங்கள் யாவும் காயத்ரியில் அடங்கியிருக்கின்றன. ஆதலால் காயத்ரியை வித்து' என்றும், வேதங்களை விருக்ஷம் என்றும், பகரலாம். சூரிய காயத்ரீ இங்ஙனம் அமைந்துள்ளது.

**ஓம் பூர்புவ சுவ:.**
**தத் சவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி|**
**தியோ யோந: பிரசோதயாத்||**



**ய:**-யார், **ந:**-நம்முடைய, **திய:**-அறிவை, **பிரசோதயாத்**-தூண்டுகிறாரோ, **தத்**-அந்த, **தேவஸ்ய**-சுடருடைய, **சவிது**-கடவுளின், **வரேண்யம்**-மேலான, **பர்க**-ஒளியை, **தீமஹி**-தியானிப்போமாக

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச்சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக. அது ஓங்காரம் அல்லது பிரணவத்தில்துவங்குகிறது. பூ:, புவ:, சுவ: என்னும் மூன்று பதங்களும் பூலோகத்தையும், மத்திய லோகத்தையும், சுவர்க்கலோகத்தையும், குறிக்கின்றன. பகிர்முகமாகப்பிரபஞ்சத்தைப்பார்க்குங்கால் இந்தமண்ணுலகத்தையும், வெட்ட வெளியையும் அதற்குமேலாக இருக்கும் வானுலகையும் இவை குறிக்கின்றன. மனிதனுடைய அமைப்பை ஆராயுங்கால் அவனிடத்து மூன்று நிலைகள் மாறி மாறி நாள் தோறும் அமைந்து வருகின்றன. விழிப்பு அல்லது சாக்கிரதாவஸ்தையைப் பூ லோகம் குறிப்பிடுகின்றது. கனவுகாணும் நிலையை (சொப்பனம்) புவலோகம் குறிக்கிறது. சுஷுப்தி அல்லது கனவற்ற நித்திரையை சுவர் லோகம் சுட்டிக்காட்டுகிறது இந்த மூன்று அவஸ்தைகளுள் ஏதேனும் ஒன்றில் மனிதன் மாறி மாறி அமைந்துள்ளான். தத் என்னும் சொல் நாம் வணங்கும் தெய்வத்தைக் குறிக்கிறது. புறத்தில் அதை சூரிய நாராயணன் என்று சுட்டிக்காட்டலாம், அகத்தே அது பிரக்ஞானம் அல்லது பேர்அறிவு சொரூபமாக இருக்கிறது. யாரோ சிலருடைய உள்ளத்தில் தான் இருக்கிறது. மற்றவர்களுடைய உள்ளத்தில் அது இல்லை என்று யாரும் இயம்ப முடியாது, ஜீவகோடிகள் அனைத்தினுடைய உள்ளத்திலும் அது சாட்சியாக அமைந்திருக்கிறது. தேவஸ்ய சவிது: என்னும் சொற்றொடரில் தேவஸ்ய என்பது பெயர் உரிச்சொல்லாய் இங்கு அமைந்திருக்கிறது. சுடருடைய என அது பொருள் படுகிறது தேவ: என்னும் சொல்லுக்கு அது ஆறாம் வேற்றுமை, எது திவ்விய மானதோ அது தேவன். சுடர்விட்டுக் கொண்டிருக்கும் பொருள் ஒன்று தேவன் என அழைக்கப்படுகிறது, புற உலகில் சதா சுடர் விட்டுக் கொண்டிருக்கும் பொருள் சூரியன், நமது சொரூபத்தில் ஆத்மன் சதா சுடர் விட்டுக்கொண்டிருக்கிறது, சுடரில்லாத சூரியன் இல்லை. பிரகாசமில்லாத ஆத்மனுமில்லை. சவிது: என்பது கடவுளின் எனப்பொருள் படுகிறது, சவித்து என்னும் பதத்தின் ஆறாம் வேற்றுமையாக சவிது என்பது அமைகிறது. இரு

க்கின்ற அனைத்தையும் சவித்ரு தேவதை தோற்றுவித்தது எனப் பொருள்படுகிறது. நாம் வசிக்கும் உலகத்தையும் அதிலுள்ள உயிர்களையும் தோற்றுவித்த பிரபஞ்ச சொரூபமான தெய்வம் சூரியன். பிரபஞ்சத்திற்கு அப்பால் இருக்கும் பரமாத்மன் பிரபஞ்சத்தையே தோற்றுவிக்கும் பொருள் ஆகிறான். நமக்கு அவன் அந்தராத்மாவாயிருந்து நம்மைத் தோற்றுவித்திருக்கிறான். பாம்பு தன் மேல்சட்டையை ஒன்றன் பின் ஒன்றாகத் தோற்றத்திற்குக் கொண்டுவருகிறது. சட்டையைக் களைவதால் பாம்பின் சொரூபம் கெட்டுப் போய் விடுவதில்லை. ஆத்மா அங்ஙனம் தேகத்தைத் தோற்றுவிக்கிறது. எத்தனை தேகங்களை வேண்டுமானாலும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றுவிக்க வல்லது அது. விதையானது மரத்தைத் தோற்றுவித்துவிட்டு தான் மரத்தில் மறைந்து விடுகிறது. ஆனால் பரமாத்மன் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து விட்டு அவன் பிரபஞ்சத்தில் லயமாகிவிடுபவனல்லன். சனாதன பீஜமாய் இருந்து உலகனைத்தையும் உண்டு பண்ணிக் கொண்டே வருகிறான். அதனால் அவனுடைய சொரூபத்துக்கு ஒருவிதமான குறைவும் வந்து விடுவதில்லை. அத்தகைய பொருளை சவித்ரு என்னும் பெயர் குறிக்கிறது.

**தேவஸ்ய சவிது:**-அத்தகைய தெய்வீகப் பொருளின்; **வரேண்யம் பர்க:**-மேலான ஒளியை; **தீமஹி**—தியானிப்போமாக.

எது விரும்பி வேண்டப்படுகிறதோ அது வரேண்யம் எனப்படுகிறது. சூரியனுடைய உதயத்தை எல்லோரும் விரும்பி வேண்டுகின்றனர். இது வந்து விட்டதே என்று நொந்து கொள்வார் யாருமில்லை. கோடைக் கதிரவன் வெண்கதிர் வீசி உலகத்தைக் காய்ச்சுவதும் வேண்டப்படுகிறது. அப்படி உலகம் காய்வது மழை வருவதற்கு ஏதுவாகிறது. ஆக சூரியன் எந்தநிலையில்இருப்பினும் அவன் வரன் அல்லது விரும்பப் படுபவன் ஆகின்றான். பர்க: என்பது அவனுடைய பிரகாசம். சூரியனை அவனுடைய பிரகாசத்தினின்று பிரித்து வைக்க முடியாது. சூரியப்பிரகாசம் உலகிலுள்ள கேடுகளை அகற்றவல்லது. அஞ்ஞான இருளை அது நீக்குகிறது. இதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம். ஆனால் நமக்குக் கட்புலனாகாது நமது உள்ளத்தினுள் வரேண்யம் பர்க: என்னும் போற்றுதற்குரிய பொருள் ஒன்று ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அத்தகைய தனது



*முற்றொடர்ச்சி:-*

# உருவ வழிபாடு.

(கங்காதரன்)

இறைவன் சிருஷ்டிக்கு அப்பால் எங்கோ வெகு தூரத்திலிருந்துகொண்டு தான் சிருஷ்டித்த ஜீவர்களை பிணி மூப்பு சாக்காடு என்னும் இருட் குழியில் வீழ்த்தி துயருறுத்துகிறான் எனக் கருதுவது பெரும் பிழையாகும்; அப்படிச் செய்வது உண்மையாயின் அவன் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்பவனாகிறான். ஏனெனில் பொன்னும் அணியும் போன்று சிருஷ்டியும் இறைவனும் ஒரு பொருளின் இருவகைத்தன்மைகளாகும். வாழ்க்கையே இறைவன். இறைவனே வாழ்க்கை. இறைவனெனும் அருளமுதக்கடலில்

---

*முற்பக்கத்தொடர்ச்சி:-*

மேலாம் சொரூபத்தைப் போற்றாத உயிர் பிரபஞ்சத்தில் இல்லை. எடுத்திருக்கும் உடல் எதுவாயினும் அவ்வுடலில் எழுந்தருளியிருக்கும் ஆத்ம சொரூபம் தன்னாலேயே போற்றப்படுகிறது. தனது ஆத்மமகிமையைத் தானே உணருங்கால் அது தியானம் எனப்படுகிறது. நமது மேலாம் இயல்பை நாம் எண்ணி அதில் திளைத்திருக்கும் பொழுது அது தியானம். அத்தகைய தியானத்தால் நமக்கு ஆத்ம வளர்ச்சி உண்டாகிறது. ய:, ந:, திய:, பிரசோதயாத்—யார் நம்முடைய அறிவைத் தூண்டுகிறானோ என்பது இந்தச் சொற்றொடர்களின் பொருள் ஆகும். சூரியவெளிச்சம் வருவதால் தாவர ஜங்கமம் ஆகிய எல்லா உயிர்களும் நல்வாழ்வைப் பெறுகின்றன. அவைகளின் வளர்ச்சிக்கும் சூரியப்பிரகாசமே முதற் காரணமாகிறது. அங்ஙனம் அறிவு சொரூபமாகிய நமக்கு உள்ளிருக்கும் ஆத்மப்ரகாசம் நமது அறிவை மேன்மையில் தூண்டுகிறது. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்கள் நான்கையும் பெறும்படி நம்மைத்தூண்டுவது நமது ஆத்மசொரூபம். நமது உள்ளிருக்கும் மெய்ப்பொருளே நம்மை ஓம்புகிறது. அம்மெய்ப்பொருளை நாடியிருக்குமளவு நமது ஆத்ம வளர்ச்சி விரைவில்வந்தமைகிறது. இது தான் நமது வாழ்வைப்பற்றிய பேருண்மை. இதை அறிந்து முயலுபவன் ஆத்மசாதகன் ஆகின்றான். பரிபூரணத்தின்கண் அவன் விரைந்து செல்கிறான்.

தோன்றி இயங்கும் நிரந்தர இயக்கமேவாழ்க்கை என்பதை உணர்ந்தோனே உண்மை ஞானி. அவனே உலகின் புதிருக்கு விடைகாண வல்ல சித்தன் ஜீவன் முக்தன் நிரந்தரானந்தன்.

மனிதனுடைய அகவளர்ச்சிக்கும் அறிவின் முதிர்ச்சிக்கும் தகுந்தாற்போல சமூக சமய தர்மங்களும் சூழ்நிலையும் அமைகின்றன. ஒருவனுடைய கிரகிக்குந் தன்மைக்குத் தகுந்தாற்போல விஷயங்களை விளக்கினால்தான் அவனால் அதைப் புரிந்துகொள்ளமுடியும். உணர்வு மலர்ச்சியடையாத சாதாரண மனிதனுக்கு உயரிய ஆத்மீக தத்துவங்களைப் போதிப்பது வீண்மையாகும். ஆகையினால்தான் வாழ்வின் லக்ஷியத்தையும் மனிதனுடைய நிலைமையையும் நன்கு உணர்ந்த மகா மேதைகளாகிய பண்டைப் பெரியோர்கள் இறைவனுடைய கல்யாண குணங்கள் யாவையும் தன்னகத்தே கொண்ட தெய்வீகத் திருஉருவங்களைத் தோற்றுவித்து அதை பாமரனை வழிபடச்செய்து அதன்மூலம் அகமலர்ச்சியும் ஆத்மவளர்ச்சியு மடைய முடிவில் பரம்பொருளை உணர்ந்து பிறப்பு இறப்பு எனும் பெருஞ் சுழலினின்றும் விடுபட்டு வீடுபெறும் மார்க்கத்தை அருளிச்சென்றுள்ளனர்.

ஆகையினால்தான் மிகமிகச் சாதாரணமான பூத பைசாச வழிபாடுமுதல், மோனசமாதியில் இறைவனுடன் இரண்டறக்கலந்து இன்புறுதல் ஈறாகவுள்ள எல்லா நியமங்களுக்கும் சநாதனமான இந்து சமயம் இடமளிக்கின்றது. இதில்தான் இந்து சமயத்தின் தன்னிகரில்லாத தனிச்சிறப்பு உள்ளடங்கியுள்ளது. இந்து சமயம் ஏதோ யூகத்தினாலோ நம்பிக்கையினாலோ தோன்றியதன்று. தற்கால நவீன ஆராய்ச்சியாளர்களைவிட இன்னும் தீவிரமாகஆராய்ந்து அனுபவமென்னும் உரைக்கல்லால் தேய்ந்து தேர்ந்து தெளிந்து அந்த அஸ்திவாரத்தின்மீது தோற்றுவிக்கப்பட்டதாகும்.

ஆகையினால்தான் இந்துசமயம் தோன்றி பல்லாயிர வருடங்களாகியதுடன் இடையில் பெருஞ் சோதனைகளுக்கும் கடும் எதிர்ப்புகளுக்கும் உள்ளாகியுங்கூட இன்னும் அது தன் தனித்தன்மையை இழக்காமல் இளமை குன்றாப் பூரணப் பொலிவுடன் மிளிர்ந்து உலகப் பேரறிஞர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு



முற்றொடர்ச்சி:-

# தேவி வணக்கம்.

[சி. இராசரத்தினம்]

மாதா வுன்னை மறந்தெவரும்
 வாழ வொண்ணா திமைப்போதும்
தாதா தன்னைச் சேர்விக்கும்
 தாயே யகிலத் தாய் நீயே
ஓதா துணரு முணர் வருள்வா
 யுன்னை யொப்பார் நீயே தான்
நீகா ரென்னை யுயிர் தோறும்
 நிறைந்து நிற்கு மருட்தேவி.

நெஞ்ச மெனது புலனைந்தும்
 நின் தாள் குவிய வையாயேல்
வஞ்ச மிக்க மாயையினால்
 மயங்கி மயங்கி வீழ்வேனே
தஞ்சம் தருவாய் தாழ்த்தாதே
 தாயே யிரங்கு யானின்னும்
வஞ்சம் மிக்க விவ்வுலக
 வாழ்வி லழகோ மயங்குவதே.

உன்னை நினையும் போதெல்லா
 முள்ளும் புறமு முருகாத
என்னை யயனும் ஏன் படைத்தா
 னிறைவீ! யீதென் விதிவசமோ
அன்னை யென்னை யினி நீயு
 மாளா தொழியி லவமே யான்
மின்னை யொக்கு மிவ்வுலக
 வாழ்வில் வீழ்வேன், வாழ் நீயே.

—

முற்பக்கத்தொடர்ச்சி:-

உவகையிலாழ்த்துகின்றது. இந்து சமய நியமங்களுக்கும் உருவ வழிபாட்டிற்கும் பின்புள்ள இவ்வுண்மையை உணராமல் அதைக் கண்டிப்பது சரியன்று.

-○-

## செய்தித் திரட்டு.

### பதுளையில் மணிவாசகர் குரு பூசை.

மேற்படி குருபூசை 4–7–54 ஞாயற்றுக்கிழமை காலை ஏழு மணி தொடக்கம் சைவ பரிபாலன சங்கத்தின் **ஆதரவில்** சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. **ஆத்மஜோதி** ஆசிரியர் ஸ்ரீமான் நா. முத்தையா அவர்கள் **மணிவாசகரின் ஒருவாசகத்**தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தேவர் குறளிலும் திருநான்மறை முடிவிலும், மூன்று திவ்ய நாயன்மாரின் தமிழிலும், திருவாசகத்தின் மூலப்பொருளாகச் சொல்லப்பட்ட **"நமசிவய"** என்னும் திவ்விய மந்திரமே ஒருவாசகமென்றும், அந்த ஒருவாசகமே இறைவனின் பக்தியிலீடுபட்டோரின் ஊன்றுகோலென்றும், ஆகையால் சைவ மக்களனைவரும் திருவாசகத்தைத் தினமும் ஓதிப்பெரும் பயனடையவேண்டுமென்றும் உபந்நியாசகர் குறிப்பிட்டார்.

சொற்பொழிவின் பின் நடை பெற்ற திருவாசகப்போட்டியில் சரஸ்வதி வித்தியாசாலை மாணவர் பலர் பங்குபற்றினார்கள். செல்வி ஆ. இராஜேஸ்வரிக்கு முதற்பரிசும், செல்வி க. சடைச்சிக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன. மற்றும் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர்கட்கு ஆறுதற்பரிசுகள் வழங்கப்பட்டன. செல்வி ப. கந்தையா, ஸ்ரீமான் ஆர். சிவஞானஜோதி, ஸ்ரீமான் நா. முத்தையா ஆகிய மூவரும் போட்டி நடுநிலையாளர்களாகக் கடமையாற்றினர். ஸ்ரீமான் கே. சுப்பிரமணியம், செல்வி கே. ஜெயராணி ஆகிய இருவரும் பக்திக் கீதங்கள் பாடினர் ஸ்ரீமான் நா. கனகசபாபதி பரிசுகளை வழங்கினார்.

—

### கண்டியில் மாணிக்கவாசகர் குரு பூசை.

ஷை குரு பூசை மத்திய மாகாணச் சைவ மகாசபையின் ஆதரவில் 4–7–54ல் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. வித்துவான் மு. கந்தையா அவர்கள் **"புறம் புறம் திரிந்த செல்வம்"** என்பது பற்றி இனிய சொற்பெருக்காற்றினார்கள். பலசங்கீதவிற்பன்னர்கள் இன்னிசை விருந்தளித்தனர்.

—

## உலகயாத்திரை.

சுவாமி இராமதாஸர் அவர்களும் அன்னை கிருஷ்ணபாய் அவர்களும் உத்தம சீடர்களான சுவாமி சச்சிதானந்தருடனும் இராணி லலிதா தேவியுடனும் அகில உலகச் சுற்றுப்பிரயாணம் அடுத்த மாசம் ஆரம்பிக்கிறார்கள், ஆபிரிக்கா மார்க்கம் ஐரோப்பா சென்று அங்கே ருஷியா, ஜெர்மனி உட்பட எல்லா நாடுகளிலும் அன்புமதம்–சர்வஜனசேவையும் நேயமும்-உபதேசித்துக்கொண்டு அமரிக்கா போவார்கள், அக்கண்டத்திலிருந்து திரும்பும் வழியில் ஜப்பான், சீனம் முதலாய இடங்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

---

## ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனார் அவர்கள் நினைவுநாள் 4-8-54

ஷை நினைவுநாள் 4–8–54 புதன்கிழமை காலை 11 மணியளவில் திருக்கேதீச்சுரக் கோயிலில் கொண்டாடப்படும். என அகில இலங்கைச் சிவனடியார் சங்கக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

---

## கைவசமுள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருவாசகம்—ஆராய்ச்சிப் பேருரை நவநீத கிருஷ்ணபாரதியார் | 15–00 |
| 2 | சௌந்தர்யலகரி—சங்கராச்சாரியார் | 7–00 |
| 3 | பகவத்கீதை—ஸ்ரீ சித்பவாநந்தர் | 9–00 |
| 4 | திருமந்திர விளக்கம் சுத்தானந்தபாரதியார் | 2–50 |
| 5 | ஸ்ரீ சிவானந்த திக்விஜயம் | 7–00 |
| 6 | இராமகிருஷ்ணரின் மொழியமுதம் | 7–00 |
| 7 | வீரமுரசு | –40 |
| 8 | ஞானமுரசு | –40 |
| 9 | அன்பு முரசு | –40 |
| 10 | நமது சமய விளக்கம் | –25 |
| 11 | கணபதி பூஜை | –20 |
| 12 | ஸ்ரீ கதிர்காமமாலை | –10 |
| 13 | அர்ச்சனை மாலை | –50 |

*தபாற் செலவு தனி* **ஆத்மஜோதி நிலையம்.** நாவலப்பிட்டி.

Regd. at the G. P. O. as a News Paper H. C. 57.300

ஆத்மஜோதி ஆயுள்சந்தா ஆதரவாளர்.
S. இராசரத்தினம், சன்ஸி, வதுளை.
S. செல்லசாமி நாடார், வதுளை.


## சியவனபிருவஷ்.

இது ரிஷிகேஷ் ஸ்ரீ சிவானந்தர் ஆச்சிரமத்தில் தயாரிக்கப்பெற்றது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் முக்கியமானதும் திறமையானதுமான மருந்து. இமாலயத்திலுள்ள கிடைத்தற்கரிய மூலிகைகளினாலும் வேறும் சிறந்த பொருட்களினாலும் தயாரிக்கப்பெற்றது. ஒழுங்காக உபயோகித்து வந்தால் நற்சுகத்தையும் நீண்டவாழ்க்கையையும் அதிக உற்சாகத்தையும் நல்ல சக்தியையும் கொடுக்கக்கூடியது, [illegible]ப்பைப் படிப்படியாகக் கொல்லுகின்ற க்ஷயம் போன்ற நோய்களுக்கு கைகண்ட மருந்து. வருத்தம் சுகமாகியும் பெலவீனமுள்ளவர்களுக்கு நல்ல அவுடதம். இது மூளையின் சக்தியை வளர்த்து ஞாபகசக்தியைக் கூட்டி மன ஒருமையை வளர்க்க வல்லது. நல்ல பசிஉண்டாக்கி இரத்த சுத்தியையும் உண்டாக்குவது. இருதயசம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் விசேடமாக ஆஸ்மாவுக்கும் சுவாசப்பை சம்பந்தமான நோய்களுக்கும் மிகச்சிறந்ததென்று அநுபவத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலை மாலை ஒருதேக்கரண்டி மருந்தைச் சாப்பிட்டு அதன்பின் ½ போத்தல் சூடான பால் அருந்தவும்.

பின்வரும் விலாசத்திற்கு 6 ரூபாய் அனுப்பிவைப்பின் மருந்து பார்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

ஆத்மஜோதி நிலையம். நாவலப்பிட்டி.


## சந்தா நேயர்களுக்கு

நேயர்கள் கடிதம் எழுதும் போதும் சந்தா அனுப்பும் போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் தங்கள் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட வேண்டுகிறோம். ஆத்மஜோதி அனுப்பும்போது உங்கள் சந்தா இலக்கமும் விலாசத்தின் முன்னல் குறிப்பிடப்படுகிறது. அதனைக்குறித்து வைத்துக்கொள்ளவும்.

சரவண அச்சகம், நாவலப்பிட்டி